பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 03 2025 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைக்கு மேலும் ஊக்கம் அளிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள திட்டம் உதவிடும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நாட்டு நலனுக்கு மட்டுமே முன்னுரிமை என்ற அடிப்படையில் அனைவரும் செயல்பட வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.
- விவசாயிகள் சங்க பிரதிநிதகள் உடனான பேச்சுவார்த்தை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.
- விளையாட்டுத்துறையில் மகளிர் பங்களிப்பை அதிகரிக்க மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திருமதி **Raksha Nikhil Khadse** தெரிவித்துள்ளார்.
- ஸ்விஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Isharani Baruah** மற்றும் அனுபமா உபாத்யாயா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>>

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைக்கு மேலும் ஊக்கம் அளிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள திட்டம் உதவிடும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய அமைச்சரவை முடிவுகள் குறித்து சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறையின் மேம்பாட்டிற்கு வகை செய்யும் திட்டங்களுக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேபோல், அஸ்ஸாமில் புதிய உர உற்பத்தி நிலையம் தொடங்கப்படுவதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது உர பாதுகாப்பை உறுதி செய்யும் என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில், டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைக்கு ஊக்கமளிக்கும் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கால்நடை பராமரிப்புத்துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள இந்த திட்டம், மாற்றியமைக்கப்பட்டு கூடுதலாக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல், பால்வளத்துறையின் வளர்ச்சிக்கான மாற்றியமைக்கப்பட்ட தேசிய திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதற்காக, ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.ஏற்கனவே, இந்த திட்டம் ஆயிரத்து 790 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகாராஷ்ட்ராவில் 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான ஆறுவழிச் சாலை திட்டத்தை செயல்படுத்தவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**Pagote** –வில் உள்ள ஜவஹர்லால் நேரு துறைமுகத்திலிருந்து, **Chowk** வரை இந்த ஆறுவழிச்சாலை அமைக்கப்பட உள்ளது.

அஸ்ஸாமில் புதிய உரத் தொழிற்சாலை வளாகத்தை கட்டுவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு, உர கழக வளாகத்தில் இந்த தொழிற்சாலை தொடங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொழிற்சாலை மூலம் வருடத்திற்கு 12 லட்சத்து 7 ஆயிரம் மெட்ரிக் டன் யூரியா உற்பத்தி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மத்திய அமைச்சரவையின் இந்த முடிவுகளுக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் சாலை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு அமைச்சரவை முடிவுகள் உத்வேகம் அளிக்கும் என்று கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

நாட்டு நலனுக்கு மட்டுமே முன்னுரிமை என்ற அடிப்படையில் அனைவரும் செயல்பட வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் மேஜர் **Bob Khathing** நினைவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

நாட்டை பாதுகாப்பதற்காக மேஜர் **Bob Khathing ’** ஆற்றிய பணி சிறப்பானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு தொடர்ந்து உயர் முன்னுரிமை அளித்து வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<<<>>>>>

மத்திய ரிசர்வ் காவல்படை தினம் இன்று கொண்டாடடப்படுகிறது.

இதனையொட்டி உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள செய்தியில், நாட்டின் பாதுகாப்பில் இப்படையினர் ஆற்றிவரும் பணி போற்றுதலுக்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

அஸ்ஸாமில் மூன்று லட்சம் கோடி ரூபாய் செலவில் தேசிய நெடுஞ்சாலை ஏற்படுத்தப்பட உள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சர்வதேச தரத்திற்கு இணையான சாலை வசதிகள் அஸ்ஸாமில் ஏற்படுத்தப்படும் என்றார்.

சாலை மேம்பாட்டுத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு நிதி தடையில்லை என்றும் அமைச்சர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

விவசாயிகள சங்க பிரதிநிதகள் உடனான பேச்சுவார்த்தை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று சண்டிகரில், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் மத்தியக்குழுவினரிடையே நடைபெற்ற ஏழாவது சுற்று பேச்சுக்களுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாகவும் இது தொடரும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தை மே மாதம் 4-ஆம் தேதி நடைபெறும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

மத்திய அரசு சார்பில் திரு பியூஷ் கோயல், திரு பிரல்ஹாத் ஜோஷி ஆகியோர் வேளாண் அமைச்சருடன் இணைந்து இப்பேச்சுக்களில் பங்கேற்றனர்.

பஞ்சாப் மாநில அமைச்சர்கள் மற்றும் 28 விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

சுற்றுச்சூழல் பாதிப்புகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மட்டும் எடுக்காமல் உலக அளவில அதற்கான செயல்திட்டத்தையும், புதுமை திட்டங்களுக்கான கொள்கைகளையும் மத்திய அரசு வடிவமைத்து வருவதாக வனத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்.

இன்ற புதுதில்லியில் இதுதொடர்பான மாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை அடுத்த 22 ஆண்டுகளுக்குள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இயற்கையோடு இணைந்த வாழ்வியல் முறைகளோடு இதற்கான இலக்குகளை எட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<<>>>>>

விளையாட்டுத்துறையில் மகளிர் பங்களிப்பை அதிகரிக்க மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திருமதி **'Raksha Nikhil Khadse '** கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பெண் பத்திரிகையாளர்களுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

விளையாட்டுத்துறையில் பெண்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் என்பதற்கென திட்டம் ஒன்ற செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற பாரிஸ் ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் போட்டிகளில் மகளிர் பங்களிப்பு அதிகரித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடியது என்றும் திருமதி **Raksha Nikhil Khadse** கூறினார்.

<<<<<<<>>>>>

ஜார்கண்டில் இல்லம் தேடி அரசு நிர்வாகம் திட்டம் விரைவில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் கூறியுள்ளார்.

இன்று அம்மாநிலத்தின் **Garhwa** –வில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மக்களின் குறைகளை அவர்களது இல்லங்களுக்கே சென்று கேட்டறிந்து, உரிய தீர்வுகாண்பதற்கு ஏதுவாக இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

மகளிர் நலனுக்காக தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதி நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று திரு ஹேமந்த் சோரன் கூறினார்.

<<<<<<<>>>>>

புதுச்சேரியில் குடிநீர் பற்றாக்குறை நிலவும் பகுதிகளில் 20 லிட்டர் இலவச குடிநீர் கேன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லஷ்மி நாராயணன் கூறியுள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், அடுத்த மாதம் 14-ஆம் தேதி முதல் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக கூறினார்.

குடிநீர் பற்றாக்குறை பிரச்சினைக்கு தீர்வுகாண பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு லஷ்மி நாராயணன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் 'செய்திச்சுடர்' நிகழ்ச்சியில், "சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ள எழுத்தாளர் விமலாவுடன்", எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஸ்விஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Isharani Baruah** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 18-21, 21-17, 22-20 என்ற செட் கணக்கில், இந்தியாவின் ஆகார்ஷி காஷ்யப்பை வென்றார்.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் அனுபமா உபாத்யாயா வெற்றிபெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார்.

---------------

தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் படகு போட்டியில் இந்தியா மூன்று வெள்ளி உட்பட ஏழு பதக்கங்களை வென்றது.

-----------------

**Nicosia** மகளிர் கிராண்ட் ப்ரீ செஸ் போட்டியின் நான்காவது சுற்று முடிவில், இந்தியாவின் ஹரிக்கா துரோணவள்ளி - ஆஸ்திரியாவின் **Olga Badelka** –வை வென்றார்.

---------------

டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்துவீச்சு பிரிவில் இந்தியாவின் வருண் சக்ரவர்த்தியும், பேட்டிங் பிரிவில் அபிஷேக் சர்மாவும் இரண்டாவது இடத்தில் நீடிக்கின்றனர்.

----------------

இந்தியா – மாலத்தீவு இடையேயான நட்புணர்வு கால்பந்து போட்டி தற்போது ஷில்லாங்கில் நடைபெற்று வருகிறது.

-------------

சென்னையில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஷ்ணா சின்னப்பா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-7, 11-5, 11-4 என்ற செட் கணக்கில், ஸ்பெயினின் **Sofia Mateos**-ஐ வென்றார்.

இதர ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில், அனகத் சிங் 11-3, 11-3, 7-11, 11-1 என்ற செட் கணக்கில் - ஸ்பெயினின் **'Cristina Gomez'**-யும், **Akanksha Salunkhe** 11-8, 10-12, 4-11, 11-8, 11-9 என்ற செட் கணக்கில் - எகிப்தின் **Nadien Elhammamy** –யையும் வென்றனர்.

<<<<<<<END>>>>>